**பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு- 2015**

---

பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 யூன் 03 ஆந் திகதிய அமப/10/0958/438/001 இலக்க அமைச்சரவை அங்கீகாரத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபித்தல்

கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சரினால் 2010 மே 14 ஆந் திகதி முன்வைக்கப்பட்ட பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2010 யூன் 03 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 நவம்பர் 30 வரையிலும் நியதிச்சட்ட நிறுவகமொன்றாக சட்டவாக்கப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01

(i) சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீதிகள் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், ரூபா 101,359 கூட்டுப்பெறுமதியான 04 சொத்து மீதிகள் கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய பொறுப்புக்களில் ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(ii) சொத்துக்களின் இழிவுப் பெறுமதியை தீர்மானிக்கும் போது எதிர்கால நிச்சமயற்ற நிலைமைகளின் தாக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 54,238,648 தொகையான பெறவேண்டிய கடை வாடகை வருமானத்தின் அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களுக்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

(i) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 153,790 கிரயமான 02 நிலையான சொத்து விடயங்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த சொத்துக்களின் அடிப்படையில் கிரயத்தை விஞ்சி ரூபா 10,756 தொகை பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ii) சொத்தொன்று பாவனைக்கு எடுக்கக்கூடிய நிலைக்கு உட்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட சொத்தினை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஆண்டின் போது கைப்பற்றப்பட்ட ரூபா 58,053 தொகையான சொத்துக்கள் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

ரூபா 38,598,438 கிரயமான கழிவுப் பொருள் சுத்திகரிக்கும் இயந்திரக் கூடத்தை உள்ளடக்கிய கட்டிடத்தின் கிரயம் மற்றும் இயந்திரத்தின் கிரயம் என்பவற்றை வெவ்வேறாக இனங்கண்டு பொருத்தமான விகிதாசாரத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்வதற்குப் பதிலாக ஒட்டுமொத்த கிரயத்திற்காகவும் 5 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் பனிக்கட்டி உற்பத்திக்கூடத்திற்கான கட்டிடமொன்றாகக் கருதி வருடாந்தம் 3 சதவீதப்படி பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது. அவ்வாறே செயல்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 4 வருடங்களைக் கடப்பதற்கு முன்னர் பனிக்கட்டி இயந்திரக் கூடத்தில் பனிக்கட்டியாக்கும் இயந்திரம் மீண்டும் பழுதுபார்ப்பதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 2,656,080 செலவு செய்யவேண்டி ஏற்பட்டமையின் காரணமாக அதன் ஆயுட்காலத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு வழுவின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 1,293,531 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நியாயமான பெறுமதி ரூபா 57,255 தொகையான ரீசேர்ட் இருப்பு நிதிக்கூற்றுக்களில் ரூபா 127,988 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 70,733 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்ட 02 கடைகள் 2015 யூன் மாதம் மீள கையேற்கப்பட்டிருந்ததுடன் அத்திகதி முதல் 2015 திசெம்பர் 31 வரை கடை வாடகை வருமானம், பெறவேண்டிய கடை வாடகையாக நாட்குறிப்புப் பதிவுகள் மூலம் கணக்கீடு செய்யப்பட்டமையினால் கடைவாடகை வருமானம் மற்றும் பெறவேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 924,000 இனால் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பனிக்கட்டி உற்பத்திக் கூடத்தில் கட்டியாக்கும் இயந்திரமொன்று பொருத்தி பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,461,440 தொகையை மூலதனமாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் கட்டிக் காண்பிக்கப்பட்ட சந்தைத் தொகுதிக்காக செலவிட்டிருந்த ரூபா 2,314,760 தொகையை மீண்டுவரும் தன்மையிலானதாக செலவினத்தை மூலதனப்படுத்துதல் மீளாய்வாண்டின்போதும் சீராக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய சொத்துக்களின் பெறுமதி மற்றும் ரூபா 69,443 தொகையான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் பிழையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 129,870 தொகையான கணக்காய்வுக் கட்டணம், ஒதுக்கக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் அதிகரித்திருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்காக மொபிடெல் கோபுரத்திற்காக ரூபா 750,000 தொகையான பெறவேண்டிய வாடகையை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த மோட்டார் வாகனங்களை தரித்து வைத்தல் வருமானமாக நம்பிக்கைப் பொறுப்பிற்கு அறவிடவேண்டிய ரூபா 16,480,355 தொகை பெறவேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டிற்காக வளாகக் காணியில் பனிக்கட்டி விற்பனை செய்வதற்காக வெளித்தரப்பினரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 500,000 தொகையான வருமானம் பெறவேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நம்பிக்கைப் பொறுப்பிற்கு எதிராக தனியார் கம்பனியொன்றினால் தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் போது 6 தவணைகளில் ரூபா 2,451,250 தொகையைச் செலுத்துவதற்கு நம்பிக்கைப் பொறுப்பினால் இணங்கப்பட்டிருந்தது. 2015 நவம்பர் 04 ஆந் திகதி வரையில் சகல தவணைப்பணமும் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் போது மேலும் ரூபா 388,989 தொகையொன்று உரிய கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக நம்பிக்கைப் பொறுப்பினால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) இருப்பு அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 556,705 தொகையான ரீ சேட் இருப்பொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 603,115 ஆக கடன்பட்டோரின் கீழும் ஏனைய பெறுவனவுகளின் கீழும் காண்பிக்கப்பட்டமையால் சொத்துக்கள் ரூபா 46,410 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மத்திய மீன் சந்தைத் தொகுதிக் கட்டிடத்தில் இலங்கை டெலிகொம் மொபிடெல் நிறுவனத்தின் சமிக்ஞை கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக எழுத்துமூல உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் 2015 சனவரி மாதம் முதல் ரூபா 75,000 மாதாந்த வாடகையில் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. அதற்காக மார்ச் மாதம் முதல் திசெம்பர் வரை கிடைக்கவேண்டிய ரூபா 750,000 தொகையான வாடகை வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தவேண்டிய மீதி ரூபா 2,424,665 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கடற்தொழில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து அறவிடவேண்டிய மீதி ரூபா 99,302 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 2,325,363 தொகையான வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 16,480,355 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பிற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,361,333 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 11,119,022 தொகையான வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுப்பெறுமதி ரூபா 116,752,402 தொகையான மூன்று நிலையான வைப்புக்களுக்குரிய வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பிற்குச் சொந்தமான வாகனத் தரிப்பிடத்தில் மோட்டார் வாகனங்களை கையாளும் நடவடிக்கைகள் தனியார் கம்பனியொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் தேறிய வருமானத்தில் 40 சதவீதம் நம்பிக்கைப் பொறுப்பிற்கு அறவிடவேண்டியிருந்தமை உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2015 இன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,996,052 தொகையான மோட்டார் வாகன தரிப்பிட வருமானத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் கீழ் முன்னைய ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,026,505 கூட்டுத்தொகையான 03 மீதிகளை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| | ---------------------------------------------- | -------------------------------------- |
| (அ) | 2013 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டில் ரூபா 88 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் ரூபா 95 மில்லியன் வாடகை வருமானங்களை உழைத்துள்ள நம்பிக்கை பொறுப்பு பெறுமதிசேர் வரி செலுத்துவதற்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிறுவனத்தின் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் 2015 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு மெய்மையாய்வுச் சபை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 371 | முகாமைத்துவ பொறுப்புக் கூட்டங்களில் அங்கத்தவர்களுக்கு படிகளைச் செலுத்துவதற்காக 8 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 870,000 கூட்டுத்தொகையான முற்பணம் தீர்க்கப்படாதிருந்ததுடன் அங்கத்தவர்களினால் படிகளைப் பெற்றமையை உறுதிப்படுத்தும் பதிவேடும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி இலக்கம் 3.2 | கூறுவிலை கோராமல் கட்டிடத் தொகுதியை சுத்திகரிப்புச் செய்வதற்கு தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்துடன் 5 வருடங்களுக்கு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 1,250,000 ஆகும். எனினும் அதற்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 330,000 ஆக 2015 ஆம் ஆண்டில் ரூபா 3,960,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் வருடாந்த பாதீடு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 1994 யூன் 14 ஆந் திகதிய பீஈடீ/95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நம்பிக்கைப் பொறுப்பின் தலைவர், நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்காக திறைசேரி நியமித்த பிரதிநிதி, நிர்வாக ஒருங்கிணைப்பாளர், கணக்காய்வாளர் மற்றும் கணக்கு உதவியாளர் போன்றவர்களுக்கு திறைசேரி அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது மாதாந்த படியாக ரூபா 768,124 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

(ஊ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை — சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் நான்கு உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 760,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 32,284,953 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 27,815,592 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,469,361 ஆன வீழ்ச்சியினை காணக்கூடியதாக இருந்தது. கடை வாடகை வருமானம் ரூபா 6,381,150 இனால் அதிகரித்து பாதுகாப்புச் செலவினம் ரூபா 1,085,516 இனால் குறைவடைந்திருந்த போதிலும், சம்பளம் மற்றும் படிகள் ரூபா 8,961,902 இனாலும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினம் ரூபா 2,941,315 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை நிதிப் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 63,908,465 தொகையான உயர் பங்களிப்பொன்றைக் காண்பித்த போதிலும், பின்னைய ஆண்டுகளில் அந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்கு தேவையான தந்திரோபாயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

2010 யூன் 03 ஆந் திகதிய அமப/10/0958/438/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்கள் மற்றும் செயற்பொறுப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பேலியாகொட மத்திய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதியின் முழுமையான நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை பொறுப்பேற்றல் மற்றும் அதன் சிறந்த வினைத்திறனான செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பேணிச் செல்லல் மற்றும் அது தொடர்பாக அல்லது தொடர்புடைய விடயங்களை எடுத்து செயற்படுதல்.

(ஆ) மேற்கூறப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக வரையறையின்றி சகல வழிமுறைகளையும் எடுத்தல், ஏனைய சகல படிமுறைகளை எடுத்தலும் ஏனைய சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பேற்றலும்.

2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மீன் சந்தைக் கட்டிடத் தொகுதியின் பிரதான வருமான வழி, சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதாக இருந்ததுடன் அதன் மூலம் வருமானத்தை ஆகக்கூடிய வகையில் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை பின்வரும் விடயங்களிலிருந்து அவதானிக்கப்பட்டன.

(i) சந்தைக் கட்டிடத் தொகுதியின் வளாகத்தில் பனிக்கட்டி இயந்திரக் கூடத்தை வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வியாபாரக் கொட்டகைகளை வாடகைக்கு வழங்கி பெறப்படுகின்ற வாடகை வருமானம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 39 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்குரிய நிலுவை வாடகை வருமானம் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 88,377,350 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது ரூபா 54,238,648 ஆக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட 15 நம்பிக்கைப் பொறுப்பாளர்களினால் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவம் தொடர்பான கூற்றில் / உரித்தொன்றில் நம்பிக்கைப் பொறுப்பை தாபிக்கும் போது கையொப்பம் இடப்பட்டிருந்த போதிலும் அதற்கு சட்டரீதியான செல்லுபடித் தன்மையை வழங்குவதற்காக சட்டமாஅதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டு சட்டத்தரணி ஒருவரால் உறுதிப்படுத்தி பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் பொறுப்பாளர் ஒருவர் சில வருடங்களிலிருந்து நம்பிக்கைப் பொறுப்பு கூட்டங்களுக்காக சமூமளிக்காதிருந்தமையால் வேறொரு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு நம்பிக்கைப் பொறுப்பினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நம்பிக்கைப் பொறுப்பிற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற பேலியாகொட சந்தைக் கட்டிடத் தொகுதியின் வளவில் மோட்டார் வாகனப் பிரிவில், வருமானம் சேகரிக்கும் நடவடிக்கைகள் இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்தினால் கையேற்கப்பட்டு 2011 மார்ச் 07 ஆந் திகதி வழங்கப்பட்டு 10 வருடமான நீண்ட காலத்திற்காக தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 10 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ பொறுப்புக் கூட்டத்தின் போது அந்த உடன்படிக்கைக் காலத்தை 2014 மார்ச் வரை மாத்திரம் செல்லுபடிக்காலமாகும் வகையில் திருத்தம் செய்வதற்கும், அதன் பின்னர் மீண்டும் கூறுவிலைகள் கோரி நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை.

(ஈ) மத்திய மீன் சந்தைக் கட்டிடத்தொகுதியில் தாபிக்கப்பட்டிருந்த பெரிய பனிக்கட்டி உற்பத்திக் கூட்டத்தின் செயல்நடவடிக்கைகள் எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடாமல் ரூபா 325,000 மாதாந்த வாடகைத் தொகைக்கு இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் வருமானத்தை கூட்டுத்தாபனம் முழுமையாகப் பெற்றிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 3,900,000 தொகையான வாடகைப் பணத்தை நம்பிக்கைப் பொறுப்பிற்கு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்தால் நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த அமுக்க இயந்திரம் 2014 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தால் ரூபா 2,656,080 தொகை செலவில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதில் ரூபா 1,461,440 தொகை நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து அறவிடப்பட்டிருந்தது. நம்பிக்கைப் பொறுப்பினால் செலுத்தப்பட்ட தொகை 2015 யூன் 01 ஆந் திகதி முதல் நாளொன்றிற்கு ரூபா 10,000 வீதம் கடற்தொழில் கூட்டுத்தாபனத்திலிருந்து மீள அறவிடுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பினால் 2015 மே 26 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 திசெம்பர் 28 ஆந் திகதி வரை இந்த தீர்மானம் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் தீர்மானத்தின் பிரகாரம் செலவிடப்பட்ட தொகையை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீள் சந்தை கட்டிடத் தொகுதியின் துண்டு பனிக்கட்டி தேவைகளை நிறைவேற்றுவதற்காக பெறுகை வழிகாட்டிகளைப் பின்பற்றாமலும், எழுத்துமூல உடன்படிக்கையின்றியும் மாதாந்தம் ரூபா 250,000 தொகையொன்று நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்த வேண்டியதாகக் குறிப்பிட்டு 3 மாத காலத்திற்காக மீன் சந்தை சங்கத்திற்குக் கையளிப்பதற்கு 2015 யூலை 17 ஆந் திகதி நம்பிக்கைப் பொறுப்புச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

(i) 3 மாத காலத்தை விஞ்சி பனிக்கட்டி வழங்கும் பணிகள் 2016 திசெம்பர் வரையும் நடாத்திச் செல்வதற்கு வியாபாரச் சங்கம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதற்காக இணங்கப்பட்ட தொகையில் எத்தொகையும் நம்பிக்கைப் பொறுப்பிற்குச் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

(ii) நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் 2015 யூலை 17 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் துண்டு பனிக்கட்டி உற்பத்திக் கூடமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் 2016 திசெம்பர் 28 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீன் சந்தைக் கட்டிடத் தொகுதிக்குரிய மொத்த விற்பனைக் கொட்டகைகளின் எண்ணிக்கை 218 ஆகவும் நுகர்வோர் வியாபாரக் கொட்டகைகளின் எண்ணிக்கை 64 ஆகவும் இருந்ததுடன் சகல வியாபாரக் கொட்டகைகளுக்காகவும் சட்டரீதியான வாடகை உடன்படிக்கையொன்று நம்பிக்கைப் பொறுப்பிடம் காணப்படவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சந்தைத் தொகுதியில் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி விலங்குணவு மற்றும் கூட்டுப்பசளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு வளவின் நிலத்தில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கும் அதற்காக மாதாந்த வாடகையை அறவிடுவதற்கும் 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உரிய கம்பனி இயந்திரப் பொறிமுறைகளை தயாரிப்பதற்காக ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையொன்றைச் செலவிட வேண்டிய ஏற்பட்டமையினால் இந்த உடன்படிக்கை 15 வருடங்களான நீண்ட காலத்திற்கு கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சந்தைத் தொகுதியில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக கம்பனிக்கு கட்டணமொன்றைச் செலுத்த வேண்டியமைக்கு உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கப்படாதிருந்த போதும், நம்பிக்கைப் பொறுப்பினால் மாதாந்தம் ரூபா 519,000 வீதம் உரிய கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தமையும் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(ஆ) 2010 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய GM/RP/1288 ஆம் இலக்க மதிப்பீட்டாளர் அறிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை நுகர்வோர் விற்பனைக் கடைக்காக ரூபா 28,000 உம் பனிக்கட்டி இயந்திரக்கூடத்திற்காக ரூபா 625,000 தொகையுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக மாதாந்த வாடகை முறையே ரூபா 10,000 மற்றும் ரூபா 325,000 ஆக வாடகை அறவிடப்பட்டிருந்தது.

## 4.4 வெளிப்படையான மோசடிகள்

புறக்கோட்டையில் காணப்பட்ட மீன் சந்தை வியாபாரத்திற்காக வழங்கப்பட்ட விற்பனைக் கொட்டகைகளுக்குரிய வாடகை உடன்படிக்கையின் நிபந்தனைகள் மீறப்பட்டு அவர்களினால் வேறு தரப்பினர்களுக்கு வியாபாரக் கொட்டகை விற்பனை செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாடகை உடன்படிக்கையின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய கொட்டகை அல்லது அதன் ஒரு பகுதியோ உப வாடகைக்கு வழங்குவதற்கு, கையளிப்பதற்கு, கூட்டுமுயற்சியொன்றைச் செய்வதற்கு பகுதியொன்றை ஈடு வைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் மாற்றீடு செய்வதற்கு எவ்வித உரிமையும் வாடகைக்குப் பெற்றவருக்கு இல்லாதிருந்த போதிலும், அந்தப் பிரிவிற்கு முரணானதாக, வாடகைக்குப் பெற்றவரினால் மூன்றாம் தரப்பினருக்கு 2016 மே 31 ஆந் திகதி வரையில் 26 வியாபாரக் கொட்டகைகள் ரூபா 103,400,000 இற்கு அவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வாடகை உரித்து மூன்றாம் தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சந்தைத் தொகுதியில் வியாபாரக் கொட்டகைகள் ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டு வாடகை உரித்து கையளிக்கப்பட்ட வியாபாரிகளிடமிருந்து அந்த வியாபாரக் கொட்டகைகளுக்காக முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பிற்கு அறவிடவேண்டிய ரூபா 1,446,000 நிலுவை வாடகைப் பணத்தை அறவிடாது புதிய வாடிக்கையாளர்களுக்கு வியாபாரக் கொட்டகைகளை கையளிப்பதற்கு நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஆ) வாடகை உடன்படிக்கையின் 20 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் வாடகை உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டு மீண்டும் நம்பிக்கைப் பொறுப்பிற்கு கையளிக்கப்படுகின்ற வெற்றிடமான வியாபாரக் கொட்டகைகள் தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் கூறுவிலை கோரி மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மத்திய மீன் சந்தை கட்டிடத் தொகுதியில் மொத்த விற்பனை கொட்டகையொன்றின் சந்தை வாடகைப் பெறுமதி ரூபா 2.1 மில்லியன் முதல் ரூபா 4.7 மில்லியன் வரையான வீச்சில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டமையால் வெற்றிடமான வியாபாரக் கொட்டகை பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் போட்டியாளர் கேள்வி கோரல் மூலம் வாடகைக்கு வழங்குவதன் ஊடாக நம்பிக்கைப் பொறுப்பிற்கு உழைக்கக்கூடியதாக இருந்த பாரியளவான வருமானமொன்று கவனத்திற் கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து நம்பிக்கைப் பொறுப்பிற்கு ஆகக்கூடிய நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினால் 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு மொத்த விற்பனைக் கொட்டகைகள் 2015 யூன் 22 ஆந் திகதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பிற்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த இரண்டு விற்பனைக் கொட்டகைகளும் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பெயர் குறிப்பிட்ட இரண்டு நபர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதியின் சிற்றுண்டிச்சாலைக்காக 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,143,868 பெறுமதியான 03 குளிரூட்டிகள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது சிற்றுண்டிச்சாலையில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 128 விற்பனைக் கடைகளையுடையதாக நிர்மாணிக்கப்பட்ட நுகர்வோர் சந்தைத் தொகுதியில் 64 கடைகள் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 9,625,540 தொகை செலவில் மொத்த விற்பனைக் கடைகளாக ஆக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் இந்த 64 விற்பனை கடைகளும் 34 நுகர்வோர் கடைகளும் விளைவற்றுக் காணப்பட்டன.

**4.6 இனங்காணப்பட்ட நட்டம்**

ரூபா 83,588 பெறுமதியான செல்லுபடிக்காலம் முடிவடைந்த அடையாள அட்டை இருப்பொன்றின் பெறுமதியை பதிவழித்தல் நிதிக்கூற்றுக்களில் வேறாக வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டிய போதிலும், அச்சிடல் மற்றும் காகிதாதிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

நம்பிக்கைப் பொறுப்பு ஆரம்பிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீன் சந்தைத் தொகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட 43 பேர்களையுடைய பதவியணியினர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்காது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினதும் கடற்றொழில் மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்களின் ஊடாகவும் பதவியணியினர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**4.8 முறையான பிரகாரம் கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

நம்பிக்கைப் பொறுப்பு ஆரம்பிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும், பேலியகொட மீன் சந்தைக் கட்டிடத் தொகுதி அமைந்துள்ள 7 ஏக்கர் 3 றூட் 14.9 பேர்ச் அளவான காணி கடற்றொழில் மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சிற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்பித்தல்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு ஆரம்பிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு முதல் நிதி அறிக்கைகள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 2016 நவம்பர் 07 ஆந் திகதி அதாவது 08 மாத கால தாமதத்தின் பின்னரே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 05(02) ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 05(02)(உ) பந்தியின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் கூட்டம் 03 தடவைகள் நடாத்தப்பட்டிருந்தன. 26 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதிலளிக்கப்படாமை, உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை போன்ற பின்னடைவுகளினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் மூலம் எதிர்பார்த்த பெறுபேற்றை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 5.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றல்

மீன் சந்தை தொகுதிக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு விண்ணப்பதித்திருந்த போதிலும் அந்த அதிகாரசபையின் சிபாரிசின் பிரகாரம் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு விடுவிப்பதற்கும் மாதிரிகளுக்கு இணங்க சந்தைத் தொகுதியின் சுற்றாடலைப் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் சுற்றாடல் பாதுகாப்புப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கட்டுப்பாடு | (i) | வங்கிக் கணக்கிணக்கம் குறித்த பிரகாரம் தயாரிக்கப்பட்டமை மற்றும் காசேட்டில் பதியப்பட காசோலை அடியிதழ்களுடன் இணங்காமை |
| | | (ii) | காசேட்டில் பதிவுகள் இரு தடவை இடப்பட்டமை. |
| | | (iii) | எதிர்வரும் வருடத்திற்குரிய பதிவுகள் உள்ளடக்கட்டமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வியாபாரக் கொட்டகைகளை வாடகைக்கு வழங்குதல், வருமானக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீடு செய்தல் | (i) | சகல வியாபாரக் கொட்டகைகளையும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் வியாபரக் கொட்டகைகள் உப வாடகைக்கு வழங்கியமை. |
| | | (ii) | கடை வாடகை வருமானத்திற்காக பட்டியல் விநியோகிக்கப்படாமை. |
| | | (iii) | வங்கியில் வைப்புச் செய்து தேறுவதற்கு முன்னர் பற்றுச்சீட்டு விநியோகிக்கப்பட்டமை மற்றும் பெறுவனவுகள் பற்றுச்சீட்டு விநியோகிக்கப்படாமல் காசேட்டில் கொடுக்கல் வாங்கல்களை உட்படுத்தியமை |
| | | (iv) | காசேட்டில் பதிவுகளை உட்படுத்தும் போது நாட்குறிப்பு பதிவுகளை பயன்படுத்துதல், தேவையான சந்தர்ப்பங்களின் போது நாட்குறிப்புப் பதிவகளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் நாட்குறிப்பு பதிவுகளுக்குரிய உறுதிப்படுத்தும் பதிவேடு அப்பதிவுகளுடன் இணைக்கப்படாமை. |